




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வெள்ளி ❖ ஏப்ரல். 28, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 203 ❖ ரூ.10


### ஆன்லைன் சூதாட்ட தடை சட்டத்தில் இடைக்கால உத்தரவிட

# ஐகோர்ட் மறுப்பு

## அகில இந்திய விளையாட்டு கூட்டமைப்பு உள்ளிட்ட நிறுவனங்கள் தொடர்ந்த வழக்கில் ஆறு வாரங்களுக்குள் பதிலளிக்க தமிழக அரசுக்கு உத்தரவு

**சென்னை, ஏப். 28-**

**ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டத்தை எதிர்த்த வழக்கில், தமிழக அரசு பதிலளிக்காமல் இடைக்கால உத்தரவு பிறப்பிக்க முடியாது என மறுத்த சென்னை உயர் நீதிமன்றம், வழக்குகள் தொடர்பாக ஆறு வாரங்களுக்குள் பதிலளிக்கதமிழகஅரசுக்கு உத்தரவிட்டுள்ளது.**



தமிழக அரசு கடந்த மார்ச் 23ம் தேதி இயற்றிய தமிழ்நாடு ஆன்லைன் சூதாட்ட தடை மற்றும் ஆன்லைன் விளையாட்டுகள் முறைப்படுத்தல் சட்டத்தை எதிர்த்து 69 ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்களை உறுப்பினர்களாகக் கொண்ட அகில இந்திய விளையாட்டு கூட்டமைப்பு உள்ளிட்ட நிறுவனங்கள் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரபட்டுள்ளன.

இந்த வழக்குகள் பொறுப்பு தலைமை நீதிபதிராஜா மற்றும்பரத சக்கரவர்த்தி அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, ஆன்லைன் ரம்மி விளையாட்டு நிறுவனம் சார்பில் மூத்த வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி, ஏற்கனவே இந்த விவகாரம் தொடர்பாக மத்திய அரசு, விதிகளை அறிவித்துள்ள நிலையில், இந்த சட்டத்தை இயற்ற மாநில அரசுக்கு அதிகாரமில்லை எனவும், ரம்மி திறமைக்கான விளையாட்டு என நீதிமன்றங்கள் தெளிவுபடுத்தியுள்ள நிலையில், இந்தச் சட்டத்தில் ரம்மி விளையாட்டு, அதிர்ஷ்ட விளையாட்டாக வகைபடுத்தப் பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

திறமைக்கான விளையாட்டாக அங்கீகரிக்கப்பட்ட ரம்மியை தடை செய்ய முடியாது எனவும், இந்தச் சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்க கூடாது என உத்தரவிட வேண்டும் எனவும் வாதிட்டார்.

ஆன்லைன் விளையாட்டு நிறுவனங்கள் கூட்டமைப்பு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஆரியமாசுந்தரம், 1930-ம் ஆண்டின் தமிழ்நாடு விளையாட்டுசட்டத்தில் இணையதளத்தைச் சேர்த்து, 2021-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டம் ரத்து செய்யப்பட்டது எனவும், அந்த உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம்எந்ததடையும் விதிக்காத நிலையில், அதற்கு பதிலாக புதிய சட்டம் கொண்டு வரப்பட்டதாகவும், மாநில அரசால் இந்த சட்டத்தை இயற்ற முடியாது எனவும் வாதிட்டார்.

திறமைக்கான விளையாட்டை சூதாட்டமாக கருத முடியாது எனவும், ரம்மி, போக்கர் போன்ற விளையாட்டுகள் அதிர்ஷ்ட விளையாட்டு அல்ல; திறமை விளையாட்டு எனவும் வாதிட்டார். ஒட்டு மொத்தமாக ஆன் லைன் விளையாட்டுக்களுக்கு தடை விதிக்க மாநில அரசுக்கு அதிகாரமில்லை எனவும், திறமைக்கான விளையாட்டுக்களை முறைப்படுத்த முடியுமே தவிர தடை செய்ய முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு சட்டம் இயற்றினால், மாநில அரசு அதே பிரச்சினை தொடர்பாக சட்டம் இயற்ற முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். தற்போது, ஐபிஎல் போட்டிகளுக்கு கூட, ட்ரீம் 11 விளையாட்டு உள்ளது எனவும், நாடு முழுவதும் விளையாடப்படும் அதை எப்படி தடை செய்ய முடியும் எனவும் கேள்வி எழுப்பிய அவர், சட்டப்படி கடும் நடவடிக்கைகள் எடுக்க கூடாது என உத்தரவிட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்.

தமிழக அரசு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், சூதாட்டம் குறித்த இந்தச் சட்டத்தை இயற்ற மாநில அரசுக்கு முழு அதிகாரம் உள்ளதாகவும், இந்த விவகாரம் தொடர்பாக சட்டம் இயற்ற மத்திய அரசுக்கு தான் அதிகாரமில்லை எனவும் விளக்கினார்.

மாநில சட்டம், தடை மட்டும் விதிக்க முடியுமே தவிர, இணையதளத்தில் இருந்து நீக்க முடியாது எனவும், அதை மத்திய அரசு தான் செய்ய வேண்டும் எனவும் விளக்கினார். திறமையை விட அதிர்ஷ்டம் மேலோங்கி இருக்கும் விளையாட்டுக்களை தடை செய்ய சட்டம் இயற்றப்பட்டுள்ளது எனவும், இந்த தளங்கள் பணம் சம்பாதித்து குடும்பங்களை சீரழிக்கின்றன எனவும், அப்பாவி குடும்பங்களை பாதுகாக்க வேண்டும் எனவும், மனுதாரர்களுக்கு பாதுகாப்பும் வழங்கக் கூடாது எனவும் அவர் வாதிட்டார்.

மற்றொரு நிறுவனம் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சதீஷ் பராசரன், மக்கள் பணத்தை பறிக்க ஆன் லைன் நிறுவனங்கள் முயற்சிப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டு தவறு என மறுத்தார். தற்போதைய நிலையில் கடும் நடவடிக்கைகள் எதுவும் எடுக்க கூடாது என உத்தரவிட வேண்டும் எனக் கோரிய மூத்த வழக்கறிஞர் சதீஷ் பராசரன், பங்குச் சந்தை இழப்பால் ஏற்படும் மரணங்களை காரணம் காட்டி, தடை விதிக்க முடியுமா எனவும் கேள்வி எழுப்பினார். மேலும், இந்த வழக்கில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்காவிட்டால், பல லட்சம் ரூபாய் புழங்கும் நிறுவனங்களை மூட வேண்டி இருக்கும் எனவும் தெரிவித்தார். விசாரணையின்போது, சமூக தீங்காக உள்ள ஆன்லைன் விளையாட்டுக்களால் மரணங்கள் நிகழ்வதாலும், குடும்பங்கள் வறுமையில் வாடுவதாலும், அவற்றை தடை செய்வதில் என்ன தவறு உள்ளது எனக் கேள்வி எழுப்பிய நீதிபதிகள், மக்கள் நலன்தான் மிக முக்கியம் எனவும் தெரிவித்தனர்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், தமிழக அரசு தரப்பில் பதிலளிக்காமல் எந்த இடைக்கால உத்தரவும் பிறப்பிக்க முடியாது என மறுப்பு தெரிவித்து, ஆறு வாரங்களில் பதிலளிக்கும்படி தமிழக அரசுக்கு உத்தரவிட்டு, விசாரணையை ஜூலை 3-ம் தேதிக்கு தள்ளிவைத்தனர்.



▶ புதுக்கோட்டை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் கவிதா ராமு தலைமையில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் ரம்யா தேவி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கவிதப்பிரியா, வேளாண் இணை இயக்குனர் பெரியசாமி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ராஜேந்திர பிரசாத் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

## மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும்- மு.க.ஸ்டாலின்



**விழுப்புரம் , ஏப். 28-**

**"கள ஆய்வில் முதலமைச்சர்" என்ற திட்டத்தின்கீழ்முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாவட்டந்தோறும் நேரில் சென்றுஆய்வுமேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் நேற்று அவர் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி ஆகிய 3 மாவட்டங்களின் வளர்ச்சி பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இதற்காக புதன்கிழமை மதியம் சென்னையில் இருந்துசாலை மார்க்கமாக விழுப்புரத்துக்கு வந்தார். தொடர்ந்து மாலையில் விழுப்புரத்தில் உள்ள கலெக்டர் அலுவலகத்தில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும்கடலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்களுடனான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.**

நேற்று 3 மாவட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். கள ஆய்வில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:- சென்னை கோட்டையில் எனது அறையில் டேஷ்போர்டு வைத்துள்ளேன்.ஒவ்வொரு பணிகளும் எந்த அளவு வளர்ச்சி அடைந்துள்ளது என்பதை அறையில் இருந்தேகண்காணிப்பேன். மாவட்ட அளவிலும் அத்தகைய கண்காணிப்பு மிக அவசியம், தொடர்ச்சியாக கண்காணிக்கப்படாத எந்த திட்டமும், வெற்றி பெற முடியாது. ஊரக வளர்ச்சித்துறை கிராம மக்களின் அடிப்படை தேவையை நிறைவு செய்வதோடு அவர்களின் வாழ்வாதாரத்திற்கும் பல்வேறு வழிகளில் உறுதுணையாக விளங்குகின்றது. 3 மாவட்டங்களை பொருத்தவரை அனைத்து அண்ணா கிராம மறுமலர்ச்சி திட்டங்களை வேகப்படுத்துங்கள்.

வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தை கவனமாக கையாண்டு பணிக்கு வருபவர்களுக்கு தாமதமின்றி ஊதியம் வழங்க வேண்டும். 15வது நிதி குழு மானிய பணிகளையும் விரைவாக முடிக்க அறிவுறுத்த விரும்புகிறேன். என்னுடையமாவட்டத்தில் இந்த காலத்தில் இந்த திட்டங்களை முடித்து காட்டினேன் என்று பேர் வாங்கும் அளவுக்கு செய்ய வேண்டும். ஒவ்வொரு திட்டத்தையும் செயல்படுத்தி காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய திட்டங்களில் ஒவ்வொருவரும் அதிக கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக குடிநீர் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளையும் வருவாய்த்துறையினர் வழங்கக்கூடிய பட்டா சேவைகள் நகர்ப்புற மேம்பாடு மற்றும் சாலை வசதிஏழைஎளியமக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவது, இளைஞர் திறன் மேம்பாடு மற்றும் கல்வி அரசு பொது மருத்துவமனையில் தரமான சிகிச்சை ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்துவது மக்களிடத்தில் நல்ல பெயரைவாங்கிகொடுக்கும் எனகேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதில் அமைச்சர்கள் கே.என்.நேரு, பொன்முடி, செஞ்சி மஸ்தான், தலைமை செயலாளர் இறையன்பு, கலெக்டர்கள் பழனி (விழுப்புரம்), பாலசுப்ரமணியம் (கடலூர்), ஷ்ரவன் குமார் (கள்ளக்குறிச்சி) மற்றும் 30-க்கும் மேற்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கலந்து கொண்டனர். அதிகாரிகளிடம் திட்டப்பணிகளை விரைந்து முடிக்குமாறும், திட்டங்களின் நிலவரம் குறித்தும் கேட்டறிந்தார்.

## பிடிஆர் ஆடியோ தொடர்பாக உள்துறை அமைச்சரிடம் தெரிவித்துள்ளோம் டெல்லியில் இபிஎஸ் பேட்டி

**டெல்லி , ஏப். 28-**

**அதிமுக- பாஜக கூட்டணி தொடர்வதாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.**



அதிமுக பொதுச் செயலாளராகபதவியேற்ற பின் முதல் முறையாக பழனிசாமி புதன்கிழமை டெல்லி சென்றார். இரவு 9 மணியளவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்தார். இதனைத் தொடர்ந்து நேற்று காலை டெல்லியில் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது, பேசிய அவர், "நாடாளுமன்றதேர்தலுக்கு இன்னும் ஒராண்டு காலம் உள்ளது. முந்தைய நாடாளுமன்ற தேர்தலில் இருந்து தற்போது வரை அதிமுக-பாஜககூட்டணி தொடர்கிறது.

எங்களுக்கும், பாஜக மாநில தலைவர் அண்ணாமலைக்கும் எந்த தகராறும் கிடையாது. எல்லோரும் அவரவர் கட்சியை வளர்க்கத்தான் பார்ப்பார்கள். அதிமுக கூட்டணியில் உள்ள கட்சிகள் எல்லாம் சுதந்திரமாக செயல்படும் கட்சிகள். திமுகவில் உள்ளது போன்ற அடிமை கட்சிகள் இல்லை. அந்தந்த கட்சிகளுக்கு கொள்கை இருக்கிறது. கொள்கையின் அடிப்படையில் அவர்கள் செயல்பாடுவார்கள். கூட்டணி என்று வரும்போது ஒற்றுமையாக செயல்பட்டு கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வோம்.

ஓபிஎஸ் மாநாடு தொடர்பான கேள்விக்கு, அவரைத் தான் கேட்க வேண்டும் என்று தெரிவித்தார்.

பிடிஆர் ஆடியோ தொடர்பான கேள்விக்கு, "அதிர்ச்சியூட்டும் தகவல் ஆடியோவில் உள்ளது. இந்த ஆடியோ தொடர்பாக ஆய்வு செய்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதை ஆய்வு செய்து, உண்மைத் தன்மையை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்று உள்துறை அமைச்சரிடம் தெரிவித்துள்ளோம்" என்று கூறினார்.

## பேக்கரி மஹராஜ் நிறுவனர் சீனு.சின்னப்பா முதலாம் ஆண்டு யோகாசனப் போட்டி நேற்று நடைபெற்றது



**புதுக்கோட்டை , ஏப். 28-**

புதுக்கோட்டை பேக்கரிமஹராஜ்நிறுவனர் அறமனச்செம்மல் சீனு.சின்னப்பா அவர்களுடைய முதலாம் ஆண்டு நினைவு தினத்தை அனுசரிக்கும் விதமாக பல்கலைத் திறன் போட்டிகள், யோகாசனப் போட்டி, இரத்ததான முகாம், சிலம்பம், கராத்தே போட்டிகள், கவியரங்கம், பரிசளிப்பு விழா என ஐந்து நாள் நிகழ்வின் துவக்க விழா சின்னப்பா நகரில் உள்ள மஹராஜ் மஹாலில் புதன்கிழமை நடைபெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்வாக யோகாசனப் போட்டியானது சின்னப்பா நகரில் உள்ள மஹராஜ் மஹாலில் நேற்று நடைபெற்றது.

போட்டியினை எஸ்.வி.எஸ் ஹீரோ வின் நிர்வாக இயக்குனர் எஸ்.வி.எஸ். ஜெயகுமார் துவங்கி வைத்தார், ரோட்டரிமாவட்டம்3000-தின் முன்னாள் துணை ஆளுநர்கள் கருணாகரன், பிரசாத், பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட அரசு சிறப்பு வழக்கறிஞர் செந்தில் குமார் சிறப்புரையாற்றினார் மதியம் நடைபெற்ற கவிதைப்போட்டியினை மாமன்னர் கல்லூரியின் பொருளாதார துறை பேராசிரியர் கருப்பையா துவங்கி வைத்தார். நடுவர்களாக கவிஞர் மா.கண்ணதாசன், தமிழ் ஆசிரியர்கள் உதயகுமார் ஆனந்தி ஆகியோர் கலந்துகொண்டனர் ஆத்மா யோகா மையத்தின் நிறுவனர் யோகா ரெ.பாண்டியன் வரவேற்புரையாற்றினார்.

யோகா மற்றும் கவிதைப் போட்டிகள் LKG, UKG, ஒன்றாம் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை, 4-ம் வகுப்பு முதல் 6- ஆம் வகுப்பு வரை, 7-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரை 10 - முதல் 12-ம் வகுப்பு என 5- பிரிவாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக நடைபெற்றது. 350க்கும் மேற்பட்ட பள்ளி கல்லூரி யோகா மற்றும் கவிதை ஒப்புவித்த மாணவ மாணவிகள் பெற்றோர்களோடு கலந்துகொண்டனர். முன்னதாக அறமனச்செம்மல் சீனு. சின்னப்பா அவர்களின் உருவப்படத்திற்கு குழந்தைகள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் கோடைகால பயிற்சி முகாம்

## கலெக்டர் ரமண சரஸ்வதி அறிவிப்பு

அரியலூர் ஏப்ரல் 28

அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் மாவட்ட அளவில் கோடைகால பயிற்சி முகாம் நடைபெறுகிறது. இது பற்றி அரியலூர் மாவட்ட கலெக்டர் பெ.ரமண சரஸ்வதி வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது;- 2023 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், அரியலூர் மாவட்டத்தின் சார்பாக, மாவட்ட அளவிலான இலவச கோடைகால பயிற்சி முகாம் அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில், 01.05.2023 முதல் 15.05.2023 வரை, 15 நாட்களுக்கு காலை 6.30 மணி முதல் 8.30 மணி வரையிலும், மாலை 4.30 மணி முதல் 6.30 மணி வரையில் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து, ஆகிய விளையாட்டுகளுக்கு நடைபெற உள்ளது.



இப்பயிற்சியில் கலந்து கொள்ளும் மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நடத்தும் விளையாட்டு விடுதியில் சேர்வதற்கான அறிவுரை மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படும்.மேலும்பயிற்சி முகாமில்கலந்துகொள்ளும் அனைவருக்கும்சான்றிதழ் வழங்கப்படும். தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்படுபவர்கள் விளையாட்டு விடுதியில் சேருவதற்கு பரிந்துரை செய்யப்படுவார்கள்.

அரசுஉயர்நிலைபள்ளி, மேல்நிலைப்பிள்ளி, மெட்ரிக்உயர்நிலைபள்ளி, மேல்நிலைப்பிள்ளி, நடுநிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர் மற்றும் மாணவரல்லாத மாணவர்கள் மற்றும் மாணவிகள் விளையாட்டில் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். பயிற்சி முகாமில் கலந்து கொள்பவர்கள் தங்களது பெயர்களை அலுவலக வேலை நேரங்களில் காலை 10.00 முதல் 5.00 மணிவரை நேரடியாகவோ (அல்லது) தொலைபேசி வாயிலாகவேபெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம். பயிற்சியில்கலந்துகொள்ள ஆர்வமுள்ளவர்கள் 1.5.2023 அன்று பிற்பகல் 4.00 மணி அளவில் அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்கு நேரில் வருகை தருதல் வேண்டும்.

மேலும் பெயர்களை பதிவு செய்திட ஹாக்கி பயிற்றுநர் கார்த்திகேயனை,7010924919 என்ற தொலைபேசி எண்ணிலும் அல்லது கைப்பந்து பயிற்றுநர் ஹரிஹரனை 9840836339 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சங்கரன்கோவிலில் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியிடம் கோரிக்கை மனு

தென்காசி,ஏப்.28–

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில், தென்காசிமாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், திமுக துணைப் பொதுச் செயலாளர் கவிஞர் கனிமொழியிடம்,தமிழ்நாடு புதிரை வண்ணார் சமுதாய மக்களின் சார்பாக கோரிக்கை மனு கொடுத்தனர்.



புதிரை வண்ணார் தனிநலவாரிய அலுவல் சாரா உறுப்பினர் நியமனம், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்து கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் தொடர்ந்து காலதாமதம் ஆகியுள்ள நிலையில் அதை உடனே செயல்படுத்த வேண்டியும், சாதி சான்றிதழ்கள் பெறுவதில் மிகுந்த சிரமங்கள் ஏற்படுவதால் உடனே அதை நிறைவேற்றி தருவதாக முதல்வர் உறுதி கூறியதின் பேரில் அதை விரைந்து முடித்து தர வேண்டி கனிமொழி எம்பியிடம் மனு கொடுத்தனர்.

இந்நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினரும், தென்காசி திமுக வடக்கு மாவட்ட செயலாளருமான ராசா ஈஸ்வரன், வாசுதேவநல்லூர் எம்எல்ஏ சதன் திருமலை குமார், தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் துரை. ரவிச்சந்திரன், மற்றும் திமுக நிர்வாகிகள், பூர்வீக மக்கள் விடுதலைக் கட்சி தென்காசி மாவட்ட பொறுப்பாளர்கள், பொதுச் செயலாளர் முருகேசன், மாவட்டத் தலைவர் சுப்பிரமணியன், மாரியப்பன் ஆகியோர் கலந்துகொண்டு மனு கொடுத்தனர்.



மாநில அளவில் 13 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கான கூடைப்பந்து போட்டி தமிழகக் கூடை பந்தாட்ட கழகத்தினரால் வருகின்ற 16.5.2023 விருதுநகரில் நடைபெற உள்ளது, எனவே இதன் தொடர்பாக புதுக்கோட்டை மாவட்ட கூடைப்பந்து கழகத்தின் சார்பாக 13 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவியர்களுக்கான புதுக்கோட்டை மாவட்ட கூடைப்பந்து அணித் தேர்வு வருகின்ற சனிக்கிழமை 29.4.2023 மாலை 3 மணி அளவில் அறந்தாங்கி அரசு ஆண்கள் மாதிரி மேல்நிலைப்பள்ளி கூடைப்பந்து மைதானத்தில் நடைபெற உள்ளது. இத்தேர்வில் பங்குபெறும் மாணவ, மாணவியர்கள் பள்ளி உறுதிச்சான்றிதழ் ஆதார் எமிஸ் நம்பர் இவற்றுடன் பங்கு பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது தொடர்புக்கு 9842221064 மற்றும் 9751810910




### மே 1ம் தேதி புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள

# 497 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம் நடைபெறும்

புதுக்கோட்டை, ஏப். 28 –

மே 1ம் தேதி திங்கள் கிழமை புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 497 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம் நடைபெறும் என மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தொழிலாளர் தினமான 01.05.2023-ஆம் தேதியன்று காலை 11.00 மணிக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 497 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கிராம ஊராட்சிநிர்வாகம்மற்றும் பொது நிதி செலவினம் குறித்துவிவாதித்தல்,கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை, சுத்தமான குடிநீர் விநியோகத்தினை உறுதி செய்வது குறித்து விவாதித்தல், கிராம வளர்ச்சி திட்டம் (VPDP), அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம், பிரதம மந்திரி ஊரகக்குடியிருப்புத் திட்டம், அனைவருக்கும் வீடு கணக்கெடுப்பு, பிரதம மந்திரி கிராம சாலை திட்டம், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்), ஜல் ஜீவன் இயக்கம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், 'நான் முதல்வன்" திட்டம் மற்றும்இதரப்பொருட்கள் விவாதிக்கப்பட உள்ளன. மேற்குறிப்பிட்டுள்ள அரசின் திட்டங்கள் மற்றும் ஊராட்சியின் செயல்பாடுகள் பற்றிய விபரங்களை தெரிந்து கொண்டு பயன்பெறும் வகையில் பொதுமக்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்தவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் என அனைவரும் அதிக அளவில் கலந்து கொண்டு கிராம சபைக் கூட்டத்தைச் சிறப்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

# அறந்தாங்கி அருகே தாணிக்காடு ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம்

அறந்தாங்கி,ஏப்.28–

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே தாணிக்காடு ஸ்ரீ முத்துவிநாயகர், ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் மஹா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.



ஆவுடையார்கோவில் தாலுகா ஏம்பல் ஊராட்சியில் உள்ள தாணிக்காடு கிராமத்தில் அமைந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீ முத்துவிநாயகர், ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் திருப்பணிகள் முடிவுற்று கும்பாபிஷேகம் நடத்துவதென அப்பகுதி கிராமத்தார்களால் முடிவு செய்யப்பட்டது.இதற்காக சிறந்த யாகசாலை அமைத்து கடந்த 26ம் தேதி புதன்கிழமை கணபதி ஹோமத்துடன் விழா தொடங்கியது, அதனை தொடர்ந்து 2நாட்களாக 3கால யாக பூஜை நடைபெற்று வந்தது.

விழாவின் முக்கிய நிகழ்வாக நேற்று பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பெற்று பூஜிக்கப்பட்ட புனித நீரோடு கடம்புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது, அதனை தொடர்ந்து சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது, கும்பாபிஷேகத்தைக்காண திரண்டிருந்த அப்பகுதியை சுற்றியுள்ள கிராம மக்கள், ஆன்மீக மெய்யன்பர்கள் சாமி அருள் பெற்றுச் சென்றனர்,அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது, ஏம்பல் உதவி ஆய்வாளர் சந்திரசேகரன் தலைமையிலான காவல்துறையினர்பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர், நிகழ்ச்சியில் சுமார் 2000க்கும் மேற்பட்ட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# திருமயம் சண்முகநாதன் பொறியியல் கல்லூரியில் நேரடி வளாக நேர்காணல் : 22 மாணவர்கள் தேர்வு

திருமயம், ஏப்.28–

திருமயம் சண்முகநாதன் பொறியியல் கல்லூரியில் இறுதியாண்டு இயந்திரவியல், மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறைமாணவர்களுக்கான நேரடி வளாகநேர்காணல் நேற்று நடைபெற்றது. வளாக நேர்காணலுக்கு வந்திருந்த அனைவரையும் கல்லூரி வேலை வாய்ப்பு அலுவலர் ஆர்.சொர்ணலதா வரவேற்றார், கல்லூரி முதல்வர் குழ.முத்துராமு வாழ்த்துரை வழங்கிப் பேசினார், சென்னை ஜே பிஎம்.ஆட்டோலிமிடெட் நிறுவன மனிதவளத்துறை அதிகாரி புருஷோத்தமன் தலைமை உரை நிகழ்த்தி வளாக நேர்காணலை நடத்தினார்.



இவ்வளாகநேர்காணல் எழுத்துத்தேர்வு,கலந்தாய்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியமூன்றுகட்டங்களாக நடைபெற்றது,இந்தவளாக நேர்காணலில் கல்லூரியில் இறுதியாண்டு பயிலும் இயந்திரவியல், மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறை மாணவர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இவ்வளாக நேர்காணலில் 22 மாணவர்கள் தேர்வு பெற்றனர், அவர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கபட்டன. இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி இயந்திரவியல் துறைத்தலைவர் மோகன் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிக் குழுவினர் செய்திருந்தனர், நிறைவாக கல்லூரி உதவி வேலைவாய்ப்பு அலுவலர் திவ்ய சொப்னா நன்றி கூறினார்.

### "எங்கள் வாழ்க்கை கேள்விக்குறி ஆகிவிட்டது"

# சூடானில் இருந்து மதுரை திரும்பிய குடும்பத்தினர் உருக்கம்

மதுரை, ஏப். 28 –

சூடான் உள்நாட்டுப் போர் எதிரொலியாக, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் விமானம் மூலம் நேற்று மதுரை வந்தனர்.

சூடான் நாட்டில் உள்நாட்டு போரால் பாதிக்கும் தமிழர், இந்தியர்களை மீட்க வெளியுறவுத் துறை மூலம் மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.'ஆப்ரேசன் காவேரி' என்ற பெயரில் முதல் கட்டமாக 360 பேர் மீட்கப்பட்டனர். தமிழர்களை மீட்க தமிழ்நாடு அரசும் நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக தகவல் பெறும் விதமாக கட்டுப்பாட்டு அறை ஒன்று திறக்கப்பட்டது. இதன் மூலம் தமிழகத்தைச் சேர்ந்த 9 பேர் டெல்லியில் இருந்து விமானம் மூலம் தமிழ்நாடு வந்தனர்.



இவர்களில் சூடான் நாட்டில் பணிபுரிந்த ஜோன்ஸ் திரவியம், சேத்ருத்ஜெபா, ஜென்னி ஜோன்ஸ், ஜோஸ்னா ஜோன்ஸ் ஆகிய 4 பேர் மதுரை விமான நிலையம் வந்தடைந்தனர். அவர்களுக்கு அரசு சார்பில், வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் அவர்களின் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கமாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்தது.

ஜோன்ஸ் திரவியம் என்பவர் கூறுகையில், "ராணுவத்திற்கும்,துணை ராணுவத்திற்கும்இடையே நடக்கும் உள்நாட்டு போரில் பொதுமக்கள் பாதிக்கின்றனர். இந்தியர்கள் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காட்டுன் உள்ளிட்ட இடங்களில் வசிக்கின்றனர். போர்த் தாக்குதலால் கடந்த 10 நாளாக மின்சாரம், குடிநீர் கிடைக்கவில்லை. பெரும்பாலானஇடங்களை துணை ராணுவம் கைப்பற்றியுள்ளது. போர் குறித்து பத்திரிகை, ஊடகங்களில் செய்திகள் வந்ததால் தமிழக அரசு மீட்பு நடவடிக்கை எடுத்தது.

இன்னும் 3 ஆயிரத்துக்கும் அதிகமான இந்தியர்கள் அங்குள்ளனர்.அவர்களை வாட்ஸ்- அப் குழு மூலம் மீட்க முயற்சிக்கிறோம். முக்கிய உடமைகளை தவிர. பிற பொருட்கள் எடுத்துச் செல்ல அனுமதியில்லை. நான் ஒரு பள்ளி இயக்குநராக பணிபுரிந்தேன். எனது மூத்த மகள் ஜென்ஸி ஜோன்ஸ் மருத்துவம் 3-ம் ஆண்டும், 2-வது மகள் ஜோஸ்னா ஜோன்ஸ் 2-ம் ஆண்டும் படிக்கின்றனர். எங்களது வாழ்க்கை கேள்விக்குறி ஆகிவிட்டது. அங்கும், இங்கும் கல்வி முறை வேறு. பிள்ளைகள் படிப்பை தொடர முதல்வர் உதவவேண்டும்" என்றார்.

# மேலபெரும்பள்ளம் ஊராட்சியில் புதிய மின்மாற்றி துவக்க விழா

## எம்எல்ஏ நிவேதா எம்.முருகன் திறந்து வைத்தார்



தரங்கம்பாடி, ஏப். 28 –

மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோயில் ஒன்றியத்திற்கு உட்பட்ட மேலபெரும்பள்ளம் ஊராட்சியில் புதிய மின்மாற்றி துவக்க விழா நடைபெற்றது.

மேலபெரும்பள்ளம் ஊராட்சி கீழத்தெருவில் குறைந்தமின் அழுத்தத்தால் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் மற்றும் கிராம மக்கள் பாதிக்கப்பட்டு வந்தனர். இந்த நிலையில் புதிய மின் மாற்றி அமைக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலையில் 100 கிலோ வாட் திறன் கொண்ட ரூ.8.60 லட்சம் மதிப்பீட்டில் புதிய மின் மாற்றி அமைத்து அதை பொதுமக்கள் பயன்படுத்துவதற்காக பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளருமான நிவேதா எம்.முருகன் திறந்து வைத்து பேசினார்.

நிகழ்ச்சிக்கு சீர்காழி மின் வாரிய செயற்பொறியாளர் லதா மகேஸ்வரி தலைமை வகித்தார். உதவி செயற்பொறியாளர் அப்துல் வஹாப் மரைக்காயர், உதவி மின் பொறியாளர் வனிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் தஞ்சை மண்டல திமுகதகவல்தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பி.எம். ஸ்ரீதர், மாவட்ட துணை செயலாளர் மு.ஞானவேலன், ஒன்றிய செயலாளர் பி.எம். அன்பழகன், எம்.அப்துல் மாலிக் செம்பை ஒன்றிய துணை தலைவர் மைனர் பாஸ்கர் மற்றும் கிராம பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தென்காசியில் மாணவர் சேர்க்கைப் பேரணி

தென்காசி, ஏப்.28–

தென்காசி 13வது வார்டு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் மாணவர் சேர்க்கைப் பேரணி நடைபெற்றது.பேரணியை தலைமை ஆசிரியர் கற்பகம் தொடங்கி வைத்தார், அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்க தமிழ் நாடு அரசு சார்பில் விழிப்புணர்வு வாகனப் பிரச்சாரம் தொடங்கப் பட்டுள்ளது.



இந்த வாகனமும் பேரணியில் கலந்துக் கொண்டது, அனைத்து தெருக்களிலும் மாணவர்களின் தெரு நாடகம் நடைப்பெற்றது, பேரணியானது மனகாவலன் தெரு,கீழப்பாறையடி தெரு,மேலப்பாறையடி தெரு வழியாக பள்ளியை வந்தடைந்தது பேரணியில் இல்லம் தேடிக் கல்வி ஒருங்கிணைப்பாளர் மணிமந்திரி கலந்துக் கொண்டார், பேரணிக்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் வின்செண்ட், கௌசல்யா,எப்சிபா, யாஸ்மின், விமலா, தமிழ்செல்வி, மாலையம்மாள், இஸ்மாயில் ஷோபியா மற்றும் ஈஸ்வரன் ஆகியோர் செய்திருந்தனர், பேரணியில் மாணவ மாணவிகள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்,பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## செப்பேடுகள், ஐம்பொன் சிலைகள் கிடைத்த இடத்திற்கு

# "திருமுறை ஈன்ற தெய்வத்தமிழ் மண்" என்று பெயர் சூட்டி சிறப்பு வழிபாடு

சீர்காழி, ஏப். 28 –

திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான சீர்காழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தான திருக்கோயில் வளாகத்துள் சுவாமி ஐம்பொன் சிலைகளும், வரலாற்றில் முதன் முறையாக தேவாரச் செப்பேடுகளும் கிடைக்கப்பெற்றது.



இந்த புனித இடத்தை தருமை ஆதீனம் 27 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் "திருமுறை ஈன்ற தெய்வத் தமிழ் மண்" என்று அறிவித்து வழிபாடு செய்துள்ளார்.

திருமுறை கண்டெடுத்தகுருமணிகள் திருக்கரங்களால் முதலில் படிஎடுத்து அருள் பார்வையிட்டபோது செப்பேட்டில் வெளிப்பட்டருளிய திருப்பதிகம் இத்தலத்து "வெங்குரு" என்ற திருநாமம் அமைந்த "காலைநன் மாமலர் கொண்டடி பரவி" எனத் தொடங்கும் பதிகமாகும்.

காழிப்பதியில் அவதரித்த திருஞானசம்பந்தர் குறிஞ்சி பண்ணில் அருளிய முதலாம் திருமுறைப் பதிகம் இது. முதன்முதலில் "குரு" என்ற குறிப்பமைந்த அருட்பாடல்கள் கிடைத்ததும் அதே ஏட்டில் "எனதுரை தனதுரையாக" என்னும் தொடர் அமையப் பெற்றிருந்ததும் மகாசந்நிதானத்தின் குருத்துவ மகிமையை உலகம் யாவையும் உணரும் வண்ணம் திருவருள் நிகழ்த்திய அற்புதமாகும்.

குருமணிகள் அன்று முதல் இந்த திருப்பதிகத்தை நாள்தோறும்பாராயணம் செய்து வருகிறார்கள். அடியார்களும் இந்த இடத்தை வணங்கி இந்த பதிகத்தை ஓதி வழிபடுகின்றனர்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற வழிபாட்டு தலங்களில் சாமிதோப்பு அய்யா வைகுண்டர் பதியும் ஒன்று. இங்கு தினசரி ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். இங்கு பெரும்பாலானோர் அரசு பேருந்துகளில்தான் வந்து செல்கின்றனர். இங்கு அமைந்துள்ள பேருந்து பயணிகள் நிழற்கூடத்தின் மேல்பகுதி விழுந்து கொண்டிருக்கிறது. இது பொதுமக்களுக்கு பாதுகாப்பற்றதாக உள்ளது. எனவே மாவட்ட நிர்வாகம் உடனடியாக இதை சரி செய்ய வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாநில துணைத் தலைவர் சோ.சுரேஷ் மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளார்

# பேரூராட்சி கூட்டத்தில் கவுன்சிலர்கள் வாயில் கருப்பு துணி கட்டிக் கொண்டு பங்கேற்றதால் பரபரப்பு



திருவள்ளூர், ஏப். 28 –

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி பேரூராட்சி மன்ற கூட்டம் நேற்று முற்பகல் மன்ற வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பேரூராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி தலைமை தாங்கினார். துணைத் தலைவர் வக்கீல் கே.சுகுமார், பேரூராட்சி மன்ற செயல் அலுவலர் கலாதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட மன்ற உறுப்பினர்கள் ரகுமான்கான், முனுசாமி, சதீஷ்,குமார், சந்தானலட்சுமி குணபூபதி, பொன்னரசி, சுகன்யா, அருணா ஆகியோர் பேரூராட்சி நிர்வாகத்தை கண்டித்தும், மர்ம நபர்கள் அவதூறு நோட்டீஸ் விநியோகித்ததை கண்டித்தும் வாயில் கருப்பு துணி கட்டிக்கொண்டு கூட்டத்தில் பங்கேற்றனர்.

மன்ற பொருட்களை இளநிலை உதவியாளர் முருகவேல் வாசித்தார். இக்கூட்டத்தில் அத்திக்குளம் தெருவில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி அருகிலும், புதிய இருளர் காலணியிலும், பஜார் தெருவில் சன்னதி தெரு சந்திப்பிலும் என மூன்று இடங்களில் திருவள்ளூர் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் கே.ஜெயக்குமார் தொகுதி மேம்பாட்டு நிதியில் தலா ரூ.4 லட்சத்து 35 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.13 லட்சத்து 5 ஆயிரத்தில் உயர் கோபுர மின் விளக்குகள் அமைப்பது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தின் முடிவில், 10 வது வார்டு கவுன்சிலர் டி.கண்ணதாசன் நன்றி கூறினார்.



செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் நகராட்சிக்கு உட்பட்ட கீழக்கரணை 17வது வார்டில் அரசு நியாய விலை கடை திறப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் ரிப்பன் வெட்டி நியாயவிலைக் கடையை திறந்து வைத்தார். சிறப்பு அழைப்பாளர் நகர மன்ற கூட்டுறவு வங்கி தலைவர் சி.ஆர். குணசேகரன், நகர மன்ற தலைவர் சண்முகம் தலைமை வகித்தார். நகர மன்ற துணைத் தலைவர் சித்திரா கமலக்கண்ணன் முன்னிலை வகித்தார். 17-வது வார்டு நகர மன்ற உறுப்பினர் லயன் கே.ஆர்.விஜயகுமார் விழாவுக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றார். உடன் ஆணையர் செளந்தரராஜன், நகராட்சி பொறியாளர் வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# பூமிக்கு அடியில் கிடைக்கும் அனைத்து தொல்லியல் பொருட்களும் மத்திய அரசுக்கு உட்பட்டது

## புதுச்சேரி சபாநாயகர் ஏம்பலம் செல்வம் பேட்டி

சீர்காழி, ஏப். 28 –

சீர்காழி சட்டைநாதர் கோவிலில் புதுச்சேரி சபாநாயகர் ஏம்பலம். செல்வம் சாமி தரிசனம் செய்தார். அதனை தொடர்ந்து சட்டைநாதர் கோவில் வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட ஐம்பொன் சிலைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு சென்று பார்வையிட்டு தருமை ஆதினத்திடம் ஆசி பெற்றார்.



தொடர்ந்து பத்திரிகையாளர்களை சந்தித்த அவர், பழமை வாய்ந்த சட்டைநாதர் கோவிலில் கண்டெடுக்கப்பட்ட சிலைகளை மத்திய அரசின் பிரதிநிதியாக பார்வையிட வந்துள்ளதாகவும். பூமிக்கு அடியில் கிடைக்கும் அனைத்து தொல்லியல் பொருட்களும் மத்திய அரசுக்கு உட்பட்டது. சீர்காழி சட்டைநாதர் சுவாமி கோயிலில் கண்டெடுக்கப்பட்ட ஐம்பொன் சிலைகள், செப்பேடுகளை தருமபுரம் ஆதீனம் கட்டுப்பாட்டில் வைத்து பராமரிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என தெரிவித்தார்.

# முக்கரம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் இல்ல புதுமனை புகுவிழா: டி.ஜே.கோவிந்தராஜன் எம்எல்ஏ பங்கேற்பு

ஊத்துக்கோட்டை, ஏப். 28 –

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், முக்கரம்பாக்கம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் இ.கோதண்டன். இவரது மனைவி கே.ஜெயலட்சுமி முக்கரம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவராக பதவி வகித்து வருகிறார்.



இ.கோதண்டன் - கே.ஜெயலட்சுமி தம்பதியினர் முக்கரம்பாக்கம் கிராமத்தில் புதிய வீடு ஒன்றை கட்டினர். இதன் புதுமனை புகுவிழா நிகழ்ச்சி நேற்று காலை நடைபெற்றது. இதில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் கலந்து கொண்டு புதிய வீட்டினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட பொருளாளர் ராகவரெட்டிமேடு ரமேஷ், ஒன்றிய செயலாளர் மு.முணிபாலன், கீழ்முதலம்பேடு தொழிலதிபர் கே.வி. நாகராஜ், மாவட்ட வழக்கறிஞர் அணிதுணை அமைப்பாளர் வக்கீல் சீனிவாசன், வழக்கறிஞர் அணி எம்.ஆர்.ஸ்ரீதர், ஒன்றிய கவுன்சிலர்கள் வித்யாலட்சுமி வேதகிரி, அன்னாவரம் ஏ.டி.நாகராஜ், முக்கரம்பாக்கம் ஊராட்சி மன்றதுணைத் தலைவர் ரவிச்சந்திரன், காரணி ஊராட்சி மன்ற தலைவர் பத்மாவதி ஜெகன்நாதன், மங்களம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் டி.வெங்கடேசன், மங்களம் ஜெடராயன், பாலவாக்கம் உமாபதி, எருக்குவாய் அந்தோணி, கூட்டுறவுவங்கிமுன்னாள் செயலர் கருணாகரன் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்களும், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளும், அரசுத்துறை அதிகாரிகளும், பொதுமக்களும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



காரைக்கால் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட பச்சூர் சுடுகாட்டில் எரிவாயு மூலமாக சடலங்களை எரிக்கும் பணிக்கு ரூபாய் எழுபத்து எட்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் செலவில் இயந்திரம் அமைக்கும் பணி தொடங்கியது. இப்பணியினை எ.எம்.ஹெச்.நாஜிம் சட்டமன்ற உறுப்பினர், பார்வையிட்டு இருக்கக்கூடிய சுடுகாட்டை மேம்படுத்துவதற்காக சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் பத்து இலட்சம் ஒதுக்குவதாக தெரிவித்தார். உடன் நகராட்சி இளநிலை பொறியாளர் என்.சத்தியபாலன் இருந்தார்.

# எர்ணாவூர் மாநகராட்சி தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு ஆர்.ஓ வாட்டர் பிளான்ட்

## மாதவரம் எம்எல்ஏ சுதர்சனம் திறந்து வைத்தார்

சென்னை, ஏப். 27 –

சென்னை, வடகிழக்கு மாவட்ட திமுக தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் நரேந்திரன் ஏற்பாட்டில், எர்ணாவூரில் உள்ள மாநகராட்சி தொடக்கப்பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் தனது சொந்த செலவில் 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான சுத்திகரிக்கப்பட்ட மற்றும் குளிரூட்டப்பட்ட குடிநீர் பிளான்ட் திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.





இந்நிகழ்ச்சியில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் சேகர் இருவரும் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.

இதனையடுத்து சுட்டெரிக்கும் கோடை வெப்பத்திலிருந்து மக்களை பாதுகாக்கதிமுக தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் எர்ணாவூர் மார்க்கெட் பகுதியில் தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டு திறந்து வைத்தனர். பின்னர் பொது மக்களுக்கு தர்பூசணி, குளிர் பானங்கள், தண்ணீர் பாட்டில் வழங்கப்பட்டன. இதனையடுத்து 500க்கும் மேற்பட்ட ஏழை, எளிய மக்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் மட்டன் பிரியாணி வழங்கினர்.

நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மேற்கு மாவட்ட செயலாளர் வை.ம.அருள்தாசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர், சீனிவாசன், மணலி மண்டல குழு தலைவர் ஏ.வி.ஆறுமுகம், வட்ட செயலாளர் பவுல், மாவட்ட பிரதிநிதி ராம்குமார், விக்னேஷ் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

# அரியலூர் அருகே வள்ளலார் கல்வி நிலையத்தில் முருகானந்த அடிகளார் உருவ சிலை பிரதிஷ்டை

அரியலூர், ஏப்.28-

அரியலூர் அருகே, வள்ளலார் கல்வி நிலைய வளாகத்தில், முருகானந்த அடிகளார் உருவச்சிலை பிரதிஷ்டை செய்து, கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

அரியலூர் அருகே, கயர்லாபாத் வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட, லிங்கத்தடிமேடு என்னுமிடத்தில், கடந்த 1953 ஆம் ஆண்டு, முருகானந்த அடிகளாரால் உருவாக்கப்பட்டு, ஏழை, எளிய மாணவ மாணவிகள் தங்கிப் பயிலும், வள்ளலார் கல்வி நிலையம் உள்ளது. கடந்த 22.8.1911 அன்று, திருநெல்வேலி மாவட்டம், சிவகிரியில் பிறந்த முருகானந்த அடிகளார், தனது 24 வயதில் பெற்றோர் அனுமதியுடன் துறவு பூண்டு, வடலூர் வள்ளலார் ராமலிங்க சுவாமிகள் போதித்த சன்மார்க்க நெறிகளை பரப்புவதற்காக, திருச்சி மாவட்டத்தில் உள்ள ஆதிவயலூர், அரியலூர், லிங்கத்தடிமேடு, ஐவர்மலை வடலூர், நல்லாம்பாளையம் உட்பட, தமிழகம் முழுவதும் 108 ஆசிரமங்களை நிறுவி, அங்குள்ள மக்களுக்கு சன்மார்க்க நெறிகளை பரப்பி வந்தார். உடல் நலக்குறைவு காரணமாக, ஆந்திர மாநிலம், மதனப்பள்ளி மருத்துவமனையில், சிகிச்சை பலனின்றி, 04.03.1964 அன்று முக்தி அடைந்த முருகானந்த அடிகளாரை, வடலூரில் அடக்கம் செய்து, அவருக்குசமாதிஎழுப்பிய அவரது பக்தர்கள், அங்கு மிகப் பிரம்மாண்டமான ஆசிரமத்தையும் அமைத்துள்ளனர்.



தமிழக அளவில், வடலூர் வள்ளலாரின் கொள்கைகளை பரப்புவதற்காக முருகானந்த அடிகளாரால் 108 ஆசிரமங்கள் அமைக்கப்பட்டாலும், ஆதரவற்ற ஏழை, எளிய, மாணவ மாணவிகள், தங்கி கல்வி பயில்வதற்காக, அவரால் உருவாக்கப்பட்டது, அரியலூர் அருகே, லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலையம் மட்டும்தான். நடுநிலைப்பள்ளி வரை உள்ள அக்கல்வி நிலையம் தொடங்கி 70 ஆண்டுகளாகியும் இன்றைய காலகட்டத்திலும் அதில் 300-க்கும் மேற்பட்ட மாணவமாணவிகள் தங்கி கல்வி பயில்கின்றனர். அன்றைய காலகட்டத்தில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த கொடுக்கூர் விஸ்வநாதன் என்பவரை நிர்வாகியாக வைத்து செயல்படுத்தப்பட்ட, வரலாற்று சிறப்புமிக்க லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலையத்திற்கு, கடந்த 1972 ஆம் ஆண்டு, பாண்டிச்சேரியை சேர்ந்த வடிவேல் செட்டியார் என்பவர், மின்விளக்கு வசதியை ஏற்படுத்திக்கொடுத்தார். இந்நிலையில் அவரது மகன் எஸ்.எஸ்.வி.கலியபெருமாள் செட்டியார் என்பவர், லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலையத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக, அதன் நிறுவனர் முருகானந்த அடிகளாரின் மார்பளவு உருவச் சிலையை உருவாக்கியுள்ளார்.

மேற்கண்ட முருகானந்தஅடிகளாரின் உருவச்சிலை பிரதிஷ்டை செய்யப்படும் நிகழ்ச்சி, லிங்கத்தடிமேடு வள்ளலார் கல்வி நிலைய அலுவலக வளாகத்தில் 27-ம் தேதி நேற்று நடைபெற்றது. வள்ளலார் கல்வி நிலைய செயலாளர் கே.வி.புகழேந்தி, அவரது மனைவி செல்வராணி ஆகியோர் கணபதி ஹோமம் நடத்தி, முருகானந்த அடிகளாரின் சிலையை பிரதிஷ்டை செய்தனர், சமய நெறிமுறைகளுடன் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியில் அரியலூரைச் சேர்ந்த சோமசுந்தரம் மற்றும் பூபாலன் குழுவினர், பக்தி சிரத்தையுடன் கும்பாபிஷேகம் நடத்தினர்.

பக்தி சிரத்தையுடன் நடைபெற்ற இவ்விழாவில் ஆதி வயலூர் வெங்கடேசன், பாண்டிச்சேரியை சேர்ந்த எஸ்.எஸ்.வி. கலியபெருமாள் செட்டியார், சிதம்பரத்தை சேர்ந்த தங்கவேலு, செந்தில்நாதன், கார்த்திகேயன், கற்பகம், சாய்கீர்த்தனா, வள்ளலார் கல்வி நிலைய தலைவர் பாலகிருஷ்ணன், தலைமை ஆசிரியர் செளந்தர்ராஜன், புலவர் இளங்கோ, நல்லப்பன் ஆசிரியர், ஓய்வு பெற்ற அரசு சிமெண்ட் ஆலை அலுவலர் சுப்பிரமணியன் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள், ஆசிரியைகள், அலுவலர்கள் உட்பட பலர்கலந்துகொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் அலுவலகம் வளாகத்தில் அமைந்துள்ள மின்னனு வாக்குப் பதிவு இயந்திர சேமிப்பு கிட்டங்கியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் ஜானி டாம் வர்கீஸ் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் பார்வையிட்டார்.

# கறம்பக்குடி அருகே பாலம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டினார் அமைச்சர் மெய்யநாதன்



கறம்பக்குடி, ஏப்.28-

கறம்பக்குடி அருகே பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கையான ஆத்தங்கரைவிடுதி வெள்ளாளவிடுதி பாலம் கட்டும் பணியினை சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார். புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், ஆத்தங்கரைவிடுதி - வெள்ளாளவிடுதி பாலம் கட்டும் பணியினை, சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன் தலைமையில் நடைபெற்றது, நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பேசும்போது, தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். இதன் மூலம் பொதுமக்களின் பொருளாதாரம் உயர்வதற்கு வழிவகை ஏற்படுகிறது. அதன்படி இன்றையதினம் நபார்டு 2021-22 திட்டத்தின்கீழ், ரூ.8.15 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்படவுள்ள ஆத்தங்கரைவிடுதி - வெள்ளாளவிடுதி பாலம் கட்டும் பணி அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டுள்ளது, பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை தமிழ்நாடு முதலமைச்சர் நிறைவேற்றி உள்ளார்கள்.

மேலும் இப்பகுதியில் உள்ள பொதுமக்களின் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலைவசதி, மின்வசதி உள்ளிட்டவைகள் நிறைவேற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும், எனவே தமிழ்நாடு முதலமைச்சரால் செயல்படுத்தப்படும் இத்தகைய மக்கள்நலத் திட்டங்களை பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கூறினார். இந்நிகழ்ச்சியில், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னத்துரை, திமுக வடக்கு மாவட்ட செயலாளா கே.கே. செல்லபாண்டியன், கோட்டப்பொறியாளர் நபார்டு செந்தில்குமார், ஒன்றியக்குழுத் தலைவர் கார்த்திக், வட்டார வளர்ச்சி அலுவலர் நளினி, ஒன்றிய செயலாளர்கள் பரமசிவம், தமிழய்யா, ஊராட்சிமன்றத் தலைவா அருணாசலம், ஒன்றியகுழு உறுப்பினா திருப்பதி, உதவிப் பொறியாளர் நபார்டு ராஜதுரை, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



▶ புதுக்கோட்டை அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் "மனம் திட்டம்" மனநல நல்லாதரவு மன்றம் பற்றிய விழிப்புணர்வு மற்றும் தொடங்குவது பற்றி ஒரு சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மனநல மருத்துவர் (பொறுப்பு) மரு.சுந்தரமூர்த்தி மனம் நல்லாதரவு மன்றம் எப்படி செயல்பட வேண்டும் அதன் பொறுப்புகள் பற்றி விளக்க உரையாற்றினார். மேலும் மன அழுத்த மேலாண்மை. தற்கொலை தடுப்பு பற்றியும் விழிப்புணர்வு பயிற்சியும் நடத்தப்பட்டது. உடன் கல்லூரி முதல்வர் புவனேஷ்வரி, பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் மாவட்ட மனநல திட்ட உளவியலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அன்னவாசல் வட்டாரம் முத்துக்காடு கிராமத்தில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்



அன்னவாசல், ஏப்.28-

அன்னவாசல் வட்டாரம் முத்துக்காடு கிராமத்தில் தென்னையில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும்நோய்மேலாண்மை குறித்த கள ஆய்வு மற்றும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம் வேளாண்மை உதவி இயக்குனர் பழனியப்பா தலைமையில் நடைபெற்றது, இம்மாமில் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் நந்தகுமார், வம்பன் வேளாண் ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் கவிதா மற்றும் வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டு தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தனர்.

தென்னையில் சமீப காலமாக பூச்சி மற்றும் நோய் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது, தற்போது மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான தென்னை மரங்களில் ரூகோஸ் வெள்ளை ஈக்கள், கருந்தலைப்புழு, காண்டாமிருக வண்டு, சிகப்பு கூன் வண்டு மற்றும் தஞ்சாவூர் வேர்வாடல் போன்ற பூச்சி மற்றும் நோய்களால் சேதம் ஏற்படுகிறது, அதிலும் குறிப்பாக ரூகோஸ் வெள்ளை ஈக்களின் தாக்குதலில் மகசூல் பாதிக்கப்பட்டு இழப்பு ஏற்படுகிறது, தற்போது கோடைகால வெப்பநிலை உள்ளதால் இந்த வெள்ளை ஈக்களின் பரவல் அதிகரித்து விடுகிறது தென்னை ஓலையின் அடிப்புரத்தில் இந்தஈக்கள் முட்டையிட்டு பரவத் தொடங்கிஓலை முழுவதும் கரம் பூஞ்சானம் படர்ந்து காணப்படும் இதனை கட்டுப்படுத்தமஞ்சள் நிற ஒட்டுப்பொறி இரு மரங்களுக்கு இடையே எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது குறித்தும் தெளிப்பான்கள் மூலம் தண்ணீரை தெளித்து கட்டுப்படுத்தும் முறைகள் எடுத்துரைக்கப்பட்டது,

மேலும் கிரைசோபெர்லா ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுப்படுத்தும் முறையினை விலக்கியதுடன் ஏறு குழியில் மெட்டாரைசியம் பூஞ்சானத்தை கொண்டு காண்டாமிருக வண்டுகளில் புழுக்களை கட்டுப்படுத்தும் செயல் விளக்கத்தினை விவசாயிகளுக்கு செய்து காட்டினர், வேளாண்மை அலுவலர் கௌசல்யா மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் பாஸ்கர் ஆகியோர் முகாமிற்கு தேவையான ஏற்பாடுகளை, 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# கந்தர்வகோட்டை அருகே சோழகம்பட்டி அருள்மிகு சோழ விநாயகர் கோயில் குடமுழுக்கு விழா



கந்தர்வகோட்டை, ஏப்.28-

கந்தர்வகோட்டை ஒன்றியம், ச. சோழகம் பட்டி கிராமத்தில் அருள்புரிந்து வரும் சோழ விநாயகருக்கு புதிய ஆலயம் கட்டப்பட்டு, குடமுழுக்கு விழா அதி விமர்சையாக நடைபெற்றது. குடமுழக்கை முன்னிட்டு யாகசாலை பூஜைகள் அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, மகா கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோமம், பூர்ணாகிதி தொடர்ந்து இரண்டாம் காலபூஜைகள் புண்யாகர வஜனம், பிம்பசுத்தி, ரக்சா பந்தனம் தீபாராதனை நிகழ்ச்சியுடன், கடம் புறப்பாடு வீதி உலா கிராமத்தின் முக்கிய வீதி வழியாக மேளதாளம் முழங்க புனித நீர் கடகம் ஊர்வலம் நடைபெற்றது.

கும்பத்தில் புனித நீர் ஊற்றி குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது, குடமுழுக்கை முன்னிட்டு கோயில் வளாகத்தில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது, குடமுழுக்கு விழா ஏற்பாடுகளை கிராம பொதுமக்கள் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.



▶ தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் 01.05.2023 திங்கள் கிழமை மே தினத்தை முன்னிட்டு தென்காசி மாவட்டத்தில் உள்ள அரசு மதுபான கடைகள், அதனுடன் இணைந்து செயல்படும் மதுபானக்கூடங்கள், மற்றும் தங்கும் விடுதி மனமகிழ் மன்றத்துடன் இணைந்த மதுபானக்கூடங்கள் எஃப் எல்2, எஃப்எல்3, எப்எல்எ3, எஃப்எல்3எஎ மற்றும் எப்எல்11, அனைத்தும் மூடப்படும் அன்றைய தினம் மதுபானம் விற்பனை ஏதும் நடைபெறாது, என மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் 2.9 கி.மீ நீளத்துக்கு பக்கிங்ஹாம் கால்வாயை சீரமைக்க முடிவு – 1,200 வீடுகளை அகற்ற திட்டம்



சென்னை, ஏப்.28-

சென்னையின் மையப்பகுதியில் பக்கிங்ஹாம் கால்வாயில் 2.9 கி.மீ நீள பகுதியை சீரமைக்க நீர்வளத் துறை முடிவு செய்துள்ளது.

சென்னை மத்திய பக்கிங்ஹாம் கால்வாய் மறுசீரமைப்பு குறித்து, விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி தலைமையில் சமீபத்தில் ஆய்வு கூட்டம் நடந்தது. அதன்படி, சேப்பாக்கம் சுவாமிசிவனாந்தா சாலை முதல் ஆர்.கே.மடம் வரை 2.9கி.மீ., நீளமுள்ள பகுதிகள் தூர்வாரி சீரமைக்கப்பட உள்ளன. தமிழக நீர்வளத் துறை, சென்னை மாநகராட்சி, சுற்றுச்சூழல் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை உள்ளிட்டவை இணைந்து மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ள உள்ளனர்.

இதுகுறித்து நீர்வளத் துறை அதிகாரிகள் கூறுகையில், "பக்கிங்ஹாம் கால்வாயில் முதற்கட்டமாக 2.9 கி.மீ., நீளத்தில் மறுசீரமைப்பு பணிகள் விரைவில் துவங்க உள்ளது. இதற்காக, சேப்பாக்கம் சுவாமி சிவனாந்த சாலை முதல் ஆர்.கே.மடம் வரை 2.9 கி.மீ. நீளத்துக்கு தூர்வாரப்பட உள்ளன.

மேலும், கரையோரம் 1,200 கான்கிரீட் மற்றும் குடிசைகள் ஆக்கிரமிக்கப் பட்டுள்ளன. இவர்கள், கழிவுநீர் இணைப்புகளை நேரடியாக பக்கிங்ஹாம் கால்வாயில் இணைத்துள்ளனர். அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றுவது குறித்து, ஆக்கிரமிப்பாளர்களிடம் ஏற்கெனவே ஆலோசித்துள்ளோம். அவர்களுக்கு மாற்றுக் குடியிருப்பு வழங்குவது குறித்து, 'பயோமெட்ரிக்' முறையில் பதிவு செய்யப்பட உள்ளது. இதற்காக, அவர்களிடம் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்படவுள்ளது.

இந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டப்பின், பக்கிங்ஹாம் கால்வாயில் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு, தூர்வாரப்படும். சட்டவிரோத கழிவுநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு, கரையோரங்களில் மூலிகைசெடிகள், மரங்கள், பூச்செடிகள் நடப்பட்டு பராமரிக்கப்படும். இந்தப் பணிகள் முடிந்தப்பின், மற்ற இடங்களில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாய் மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கந்தர்வகோட்டை அருகே குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்ட பெண்ணின் 10 பவுன் தாலிச் சங்கிலி மாயம்

கந்தர்வகோட்டை, ஏப்.28-

கந்தர்வகோட்டை அருகே நடைபெற்ற கோயில் குடமுழுக்கு விழாவில் கலந்து கொண்ட பெண்ணின் கழுத்தில் கிடந்த 10 பவுன் தாலிச்சங்கிலி மாயமானதால் அப்பெண் போலீசில் புகார்.

கந்தர்வகோட்டை ஒன்றியம், ச.சோழகம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற விநாயகர் கோயில் குடமுழுக்கு விழாவிற்கு கந்தர்வ கோட்டை சிவன் கோவில் தெருவை சேர்ந்த சுந்தர்ராஜ் மனைவி சின்னமணி (75) என்பவர் கலந்துகொண்டு குடமுழுக்கு விழாவை பார்த்துக் கொண்டிருந்தபோது, அவரது கழுத்தில் கிடந்த 10 பவுன் தாலிச் சங்கிலி காணவில்லை என பதறி கொண்டு அருகில் இருந்தவர்களிடம் கூறியுள்ளார்.

அந்தப் பகுதியில் தேடியும் கிடைக்கவில்லை என தெரியவந்து, கந்தர்வகோட்டை காவல் நிலையத்தில் சின்னமணி தனது 10 பவுன் தாலிச் சங்கிலி காணவில்லை என புகார் செய்துள்ளார், புகாரின் பேரில் போலீசார் சம்பவ இடம் சென்று விசாரணை செய்து வருகின்றனர்.

# கந்தர்வகோட்டை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் திறந்து வைக்கப்பட்டது



கந்தர்வகோட்டை, ஏப்.28-

அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவரும் புதுக்கோட்டை மாவட்ட முன்னாள் முதன்மை கல்வி அலுவலருமான சாமி சத்தியமூர்த்தி 1.05 லட்சம் மதிப்பீட்டில், குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை வழங்கியிருந்தார். அதனை பள்ளி மாணவர்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கும் நிகழ்வு கந்தர்வகோட்டை சட்டப்பேரவை உறுப்பினர் சின்னதுரை திறந்து வைத்து மாணவர்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் வழங்கி தொடங்கி வைக்கப்பட்டது.

பள்ளி தலைமை ஆசிரியர் வெ.பழனிவேல் அனைவரையும் வரவேற்றார். கந்தர்வகோட்டை ஒன்றிய குழு உறுப்பினரும், அட்மா குழு தலைவருமான எம் ராஜேந்திரன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் ஆ வனிதா, மேலாண்மை குழு மேனாள் துணைத் தலைவர் எம்.சின்னையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்வில் சாமி. சத்தியமூர்த்தி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். நிகழ்வில் பேசிய சட்டப்பேரவை உறுப்பினர், பள்ளிக்கு தேவையான உதவிகளை செய்வதற்கு முன்னாள் மாணவர்களாகிய நாங்கள் எப்போதும் தயாராக இருக்கிறோம், பள்ளி மாணவர்களின் அடிப்படை தேவையான குடிநீரை சுத்திகரித்து வழங்குவது மிகச் சிறப்பான பணியாகும். இந்தப் பணியின் மூலம் மாணவர்களுக்கு சுகாதாரமான குடிநீர் கிடைப்பதோடு, ஐக்கிய நாட்டு சபையின் பிரதான நோக்கமும் இந்த நிகழ்வின் மூலம் நிறைவேறியுள்ளது.

மேலும் பள்ளி மாணவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்வதற்கு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை தீட்டி வருகிறது. அதில் முன்னாள் மாணவர்களும், சமூக ஆர்வலர்களும் அரசு பள்ளிக்கு தேவையான உதவிகளை செய்வதற்கு நமது பள்ளி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இது போன்ற திட்டங்கள் அரசு பள்ளிகளை மேம்படுத்த பயன்படும் என்றார். நிகழ்வில் நாட்டு நலப்பணித்திட்ட மாவட்ட தொடர்பாளர் எம். சீனிவாசன் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் முரளிதரன், ஆசிரியர்கள் மாரிமுத்து, ஐயப்பன், செல்வமணி, பாத்திமா உள்ளிட்டோர் பங்கேற்றனர். இறுதியில் தொன்மை பாதுகாப்பு மன்ற ஒருங்கிணைப்பாளர் ஆ.மணிகண்டன் நன்றி கூறினார்.

## தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில்

# கலெக்டர் தலைமையில் நடைப்பெற்ற அனைத்து வங்கி மேலாளர்களுக்கான நிலைக்குழு கூட்டம்



தென்காசி, ஏப்.28-

தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் அனைத்து வங்கி மேலாளர்களுக்கான நிலைக்குழு கூட்டம் நேற்று நடைப்பெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட தொழில் மையம், தென்காசி அலுவலகம் சார்பாக 2022-23 ம் ஆண்டிற்கான புதிய தொழில் முனைவோர்களை உருவாக்கும் நீட்ஸ் மற்றும், யூஓய்இஜிபி திட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விட அதிகமாக எய்திட ஒத்துழைத்த அனைத்து வங்கி மேலாளர்களுக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தொழில் வணிக்கத்துறை சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் யூ.ஒய்.இ.ஜி.பி, பி.எம்.இ.ஜி.பி, நீட்ஸ் மற்றும் பிஎம்எப்எம்இ போன்ற தமிழக அரசின் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய வங்கி மேலாளர்களுக்கு பாராட்டு கேடயங்கள் வழங்கப்பட்டது, அதன்படி, தென்காசி மாவட்டத்தின் அனைத்து திட்டங்களிலும் சிறப்பாக செயல்பட்ட முதல் மூன்று வங்கிகளான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் கனரா வங்கி ஆகிய வங்கிகளின் மண்டல மேலாளர்களுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டது மற்றும் தென்காசி மாவட்டத்தில் கிளை வாரியாக திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய கீழ்கண்ட வங்கி கிளை மேலாளர்களுக்கு பாராட்டு கேடயங்கள் வழங்கப்பட்டது.

தென்காசி மாவட்டத்திற்கான இந்தாண்டு (2023-2024) ரூ.5912 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் முன்னோடி வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, நபார்டு வங்கியுடன் இணைந்து 2023-2024-ம் ஆண்டிற்கான கடன் திட்ட அறிக்கையினை வடிவமைத்துள்ளது. இந்த திட்ட அறிக்கையில் மத்திய, மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களை அடிப்படையாக கொண்டு பல்வேறு துறைகளில் கடன் வழங்க வழிவகைகள்ன் செய்யப்பட்டுள்ளன. இந்த கடன் திட்ட அறிக்கையில் விவசாயத்துறைக்கு ரூ;.4550 கோடியும் தொழில்துறைக்கு ரூ.600 கோடியும் ஏற்றுமதித்துறைக்கு ரூ.17.00 கோடியும், கல்விகடன் வழங்கிட ரூ.90 கோடியும், வீட்டுக்கடன்கள் வழங்க ரூ.265 கோடியும், இதர துறைகளுக்கு ரூ.390 கோடியும் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# பெண் அரசு ஊழியர்களுக்கு பணி நேரம் குறைப்பு– புதுச்சேரி அரசு அறிவிப்பு

புதுச்சேரி, ஏப்.28-

அரசுத் துறையில் பணிபுரியும் பெண்களுக்கு வாரத்தில் ஒருநாள் இரண்டு மணி நேரம் வேலை குறைப்பு செய்யப்படுகிறது என்று புதுச்சேரி துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தொழிலாளர்களின் வேலை நேரத்தை 12 மணி நேரமாக உயர்த்தும் தொழிற்சாலைகள் சட்டத் திருத்த மசோதா இரு வாரங்களுக்கு முன்னர் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. இந்த மசோதாவுக்கு தி.மு.கவின் கூட்டணி கட்சிகளான காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள், ம.தி.மு.க உள்ளிட்ட கட்சிகளே எதிர்ப்பு தெரிவித்தன. இருப்பினும் குரல் வாக்கெடுப்பு முறையில் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் தொழிற்சங்கங்களும் எதிர்ப்பு தெரிவித்தன. எதிர்கட்சிகளும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தது. அதனையடுத்து, அந்த மசோதாவை நிறுத்திவைப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். அதனையடுத்து, தொழிலாளர்களின் வேலை நேரம் குறித்த விவாதங்கள் எழுந்தன. முன்னதாக, 12 மணி நேர வேலை சட்டத்துக்கு புதுச்சேரி ஆளுநர் தமிழிசை சௌந்தர்ராஜன் ஆதரவு தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் புதுச்சேரியில் பேசிய தமிழிசை சௌந்தர்ராஜன், 'அரசுத் துறையில் பணியாற்றும் பெண்கள் வாரம் ஒரு நாள் வெள்ளிக்கிழமை அன்று காலை 9 மணிக்கு வேலைக்கு வருவதற்கு பதிலாக 11 மணிக்கு வேலைக்கு வந்தால் போதும். அரசு துறையில் அமல்படுத்தினால் அதை தனியார் நிறுவனங்களும் பின்பற்றுவார்கள் என்று நம்பிக்கை உள்ளதாக தெரிவித்தார். வெறிநாய் கடிக்கான கருத்தரங்கில் கலந்து கொண்ட துணைநிலையில் ஆளுநர் தமிழிசை முதலமைச்சர் ரங்கசாமி கூட்டாக இதனை தெரிவித்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் இடைக்கால உத்தரவிட ஐகோர்ட் மறுப்பு

# மக்களின் அன்றாட தேவைகளுக்கு திட்டங்களில் கூடுதல் கவனம்





# பிடிஆர் ஆடியோ தொடர்பாக உள்துறை அமைச்சர் அமித்ஷாவிடம் புகார்


| சென்னை / புதுக்கோட்டை | 28.04.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

28.04.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

எம். பி. நாச்சிமுத்து , சென்னிமலை, கைத்தறி நெசவுத் துறையில் சமூக சேவகர் (பி.1913) (இ.1987)



இரா. செழியன் , தமிழக அரசியல்வாதி, எழுத்தாளர் (பி.1923)



பிரான்சிசு பெய்லி , ஆங்கிலேய வானியலாளர் (பி.1774) (இ.1844)



சமந்தா ருத் பிரபு , இந்தியத் திரைப்பட நடிகை (பி.1987)



## இன்றைய நினைவு நாள்

பிட்டி தியாகராயர் , திராவிட இயக்கத் தலைவர், நீதிக்கட்சியின் நிறுவனர் (பி.1852) (இ.1925)



உ. வே. சாமிநாதையர் , தமிழகத் தமிழறிஞர், தமிழ் சுவடி ஆய்வாளர், சேகரிப்பாளர், பதிப்பாளர் (பி.1855) (இ.1942)



சாலினி இளந்திரையன் , தமிழக சொற்பொழிவாளர், எழுத்தாளர் (பி.1933) (இ.2000)



## தொழிலாளர் நினைவு நாள்